T-UN-659

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலா 1 | திருவள்ளுவராண்டு 2013 ஆனி 30 | இதழ் 4

14—7—~~6982~~ 1982

ஆய்வு மானியம்

தமிழில் குறுகிய கால ஆய்வை மேற் கொள்ள உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அறிவித்திருந்தது. இதற்கென ரூ 2,30,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரூ. 3,000 முதல் ரூ. 10,000 வரை ஆய்வுத்திட்டத்தின், தன்மை தகுதி கருதி உதவித் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. பழஞ்சுவடி பதிப்பித்தல்; இலக்கண இலக்கிய வரலாறு; மொழி இலக்கிய ஒப்பாய்வு; தமிழ் இசை, நாடகம், சிற்பம்; மொழியியல்; வட்டார வழக்கு; தொழிற் கலைச் சொற்கள் திரட்டுதல்; பிற மொழிகளில் தமிழின் செல்வாக்கு; பிற மாநிலங்களிலும் நாடுகளிலும் வாழும் தமிழர் சமுதாயமும் அவர்களுக்கு நேரிடும் சிக்கல்களும்; திராவிடப் பழங்குடி மக்களின் மொழி, பண்பாடு, நாட்டுப்புறப்பாடல்கள், கலைகள் முதலிய பொருள்களில் ஆய்வு நிகழ்த்தத் தமிழகத்திலிருந்தும் பிற மாநிலங்கள், வெளிநாடுகளிலிருந்தும் 415 அறிஞர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

இவ்விண்ணப்பங்களை ஆய்ந்த வல்லுநர் குழு கீழ்க் கண்டவர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இதற்கெனத் தற்போது இவ்வாய்வு மானியத் தொகையிலிருந்து ரூ. 64,000 வழங்கப்படவிருக்கிறது. இது முதற் கட்ட அறிவிப்பாகும்.

	பெயர்	தலைப்பு
1)	மு. வை. அரபிந்தன்.	— உவமான சங்கிரகம்—மூன்று.
2)	இரா. இராசகோபாலன்.	— கவிஞர்கள் யேட்ஸ்—பாரதி ஓர் ஒப்பாய்வு.
3)	ஆ. இராசமணி.	— பனை ஏறுதல்-தொழிற் கலைச் சொற்கள் திரட்டுதல்.
4)	வீ. ப. கா. சுந்தரம்.	— தமிழ் இசையியல் நூல்.
5)	டாக்டர் வி. மி. ஞானப் பிரகாசம்,	— வீரமாமுனிவர்ஏடுகளும் தேவமாதா பிள்ளைத் தமிழ் நூலும் பதிப்பித்தல்.
6)	வ. தேனப்பன்.	— நகரத்தார் வளர்த்த சிற்பக்கலை.
7)	டாக்டர் மு. மாணிக்கம்.	— காவடிச்சிந்து ஓர் ஆய்வு
7)	ச. முருகானந்தம்.	— இராமநாதபுரம்–திருநெல் வேலி மாவட்டங்களின் கடற் கரைப் பரதவர் தொழிற் கலைச் சொற்கள்.
9)	ப. பாண்டிய ராஜா.	— கணிதவியல் கலைச் சொற்கள்-ஓர் ஆய்வு.
10)	பி. சரவணவேல்.	— தஞ்சைக் கலைத் தட்டு.
11)	டி. சுந்தரேசன்.	— தமிழ் ஆட்சிமொழி-ஒரு வரலாற்று நோக்கு.
12)	அ. அய்யம்பெருமாள்	— திருநெல்வேலி மாவட்டத்தில் சமணம்.
13)	பொ. முனியப்பன்.	— மண்பாண்டத் தொழிற் சொற்கள்.
14)	ஆர். விவேகானந்தன்	— தண்டியலங்காரம் (நிரல் நிரை முறை)
16)	என். அருணபாரதி.	— Tamil reader for Hindi Speakers.

தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலரில் வெளியாகும் எந்தப் பகுதியையும் பிற செய்தித் தாள்கள் வெளியிட ஒப்புதல் கேட்டு எழுத வேண்டிய தேவையில்லை.

சுவடி தரும் சாசனம்

தென்ஆர்க்காடு மாவட்டத்தில் இப்போது உலக நல்லூர் என வழங்கப்படும் ‘உலகில் வலிய நல்லூரில், செழிய தரையன் என்று புகழ் பெற்ற தலைவன் ஒருவனால் சிவாலயம் ஒன்று கட்டப்பட்டுள்ளது இச் செழிய தரையன் ‘தாகந்தீர்த்த செழிய தரையன்’ என்று பேசப்படுகிறான். இவனைப்போற்றிக்கோவை’ பிள்ளைத் தமிழ் முதலிய பல சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன.

இவனைப் பற்றிய பிரபந்தங்களடங்கிய சுவடியில் இவனால் கட்டப்பட்ட கோபுரத்தில் பொறிக்கப்படுவதற்காக இயற்றப்பட்ட ஒரு கவிதை ஒற்றை ஏடாக உள்ளது. ‘உலகில் வலிய நல்லூர் கோபுரத்தில் எழுதினது’ என்னும் குறிப்புடன் உள்ள அப்பாடல் வருமாறு

எளியவர் கைப்பொரு ளேவலி யோர்கொள்வ (து)
என்று மண்ணில்
ஒளியவைப் பார்கள் உலகத்துள் ளோர்கள்;
உளந்தனிலே
தெளியுஞ் செழியனுக் (கு) உண்டான கைப்பொருள்
தென் உலகை
வெளியில் வைத்தான்; நீதி கண்டறி யோம் இந்த
மேதினிக்கே.

இப்பாடல் உள்ள ஏடு இரண்டாக முறிந்து இருந்தாலும் முறிந்த பகுதியும் தொலையாமல் கிடைத்ததால் இதனை முழு வடிவில் காண முடிந்தது. இச்செய்யுள் அக்கோபுரத்தில் பொறிக்கப்பட்டு உள்ளதா என்பது தெரியவில்லை.

— ப. வெ. நாகராசன், சுவடிப்புலம்

கலை வளர் தஞ்சையிலே இசைக் கருத்தரங்கு!

ஆகஸ்ட்டு 20, 21 ஆகிய இரு நாட்களிலும் தமிழ்ப் பல்கலைக் கழக இசைத் துறையின் சார்பில் கருத்தரங்கு ஒன்று நிகழ உள்ளது.

தமிழகத்திலிருந்தும் ஆந்திரம், கர்நாடகம், மகாராட்டிரம், குசராத் ஆகிய பிற மாநிலங்களிலிருந்தும் இசைத்துறை வல்லுநர்கள் வருகை தந்து இசை பற்றி ஆய்வு செய்ய உள்ளனர்.

கருத்தரங்கின் போது இசைக்கருவிகள், இசை, நாட்டிய நூல்களின் காட்சி சிறப்பான இடம்பெறும், கருத்தரங்கையொட்டி கர்நாடக, தேவார, திவ்வியப் பிரபந்த இசை அரங்குகள் நிகழவுள்ளன.

பொறியியல், மருத்துவவியல் நூற்கள் எழுதத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கும் உதவித் தொகை

பொறியியல் மருத்துவவியல் நூற்களைத் தமிழில் எழுதுவதற்காகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ரூ.1,40,000-க்கு, ஒரு திட்டத்தைத் தொடங்கியிருக்கிறது. பொறியியல் (B.E) மருத்துவவியல் (M.B.B.S) பாடத் திட்டங்களையொட்டி நூல் எழுத விரும்புவோருக்கு இத்திட்டத்திலிருந்து பண உதவி செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற்று நூல் எழுத 67 பொறியாளர்களும், 53 மருத்துவர்களும் விண்ணப்பித்திருந்தனர். அவர்களுள் கீழ்க்கண்டவர்களை வல்லுநர்குழு தேர்ந்தெடுத்து, நூல்கள் எழுதும் பொறுப்பை ஒப்படைத்துள்ளது.

பொறியியல்

கொடுமுடி ச. சண்முகம், பொதுப் பணித்துறை, சென்னை. —	மண் நிலை இயக்கவியல்.
டாக்டர் அ. இளங்கோவன், பொறியியற் கல்லூரி, கிண்டி, —	பொருள் வலிமை.
டாக்டர் தி. க சந்திரவடிவேலு, அரசினர் பொறியியற் கல்லூரி, கோவை. —	கேளொலிப் பொறியியல்.
டாக்டர் இல. சு. ஜெயகோபால், —	அடிப்படை
பூ. சா. கோ. பொறியியற்கல்லூரி, கோவை. —	கட்டுமான வடிவமைப்பு.
டாக்டர் சு. சி. நடேசன், பூ. சா. கோ. பொறியியற் கல்லூரி, கோவை. —	கட்டிடத் தொழில் நுட்பம்.
டாக்டர் வெ. கிருட்டிணமூர்த்தி பொறியியற் கல்லூரி, கிண்டி —	மின் சுற்றுக் கோட்பாடு.
டாக்டர் கருப்பண்ணன் கோவைத் தொழில் நுட்பக் கல்லூரி. —	செயலாக்க வெப்ப இயக்கவியல்.
தி. ஆர். தியாகராசன், அழகப்பர் பொறியியற் கல்லூரி, காரைக்குடி —	புலக்கோட்பாடு.
கே. என். கே. எஸ். கே. சொக்கலிங்கம், இந்திய தொழில் நுட்பக் கழகம், சென்னை. —	உலோகவியல்.
பழனிசாமி, கோவைத் தொழில் நுட்பக் கல்லூரி —	பொறியியல் வரைபடம்
டாக்டர் சுப. வேந்தன், இந்திய தொழில் நுட்பக் கழகம், சென்னை. —	திடப் பொருட்களின் நிலை இயக்கவியல்.
கே. ஆர். கோவிந்தன், அழகப்பர் பொறியியற் கல்லூரி, காரைக்குடி. —	அடிப்படை எந்திரவியல்.
கு. நல்லதம்பி, அரசினர் பொறியியற் கல்லூரி, சேலம். —	எதிர் மின்னணுத் தொழில் நுட்பம்.
தி. க. பழனிவேலு, மண்டலப் பொறியியற் கல்லூரி, திருச்சி. —	செயலாக்க மின்அணுவியல்.
டாக்டர் வெ. விசுவநாதன். கோவைத் தொழில்நுட்பக்கல்லூரி. —	பொருள்களின் இயற்பியல்.
சி. குமார், அண்ணாமலை பல்தொழில் நுட்பக் கல்வியகம், செட்டி நாடு —	அடிப்படை மின்னியல்.
ர. ஆறுமுகம், மண்டலப் பொறியியற் கல்லூரி, திருச்சி, —	செயலாக்க எந்திரவியல்.

மருத்துவம்

டாக்டர் வெ. அனந்தராமன் சென்னைப் பல்கலைக் கழகம். —	உடலியங்கியல்.
டாக்டர் ச. காமேசுவரன், அடிப்படை மருத்துவப்பட்ட மேற்படிப்பு மையம், சென்னை. —	காது, மூக்கு தொண்டை நோய்களும் மருத்துவமும்
டாக்டர் எல். ராமகிருட்டிணன், ஜிப்மர். —	உயிர் வேதியியல்.
டாக்டர் அ. செகதீசன், தஞ்சை மருத்துவக் கல்லூரி; டாக்டர் ராசராசேசுவரி, தஞ்சை மருத்துவக்கல்லூரி. —	குழந்தைகள் மருத்துவம்,
டாக்டர் சிவராமன், தஞ்சை மருத்துவக் கல்லூரி —	அறுவை சிகிச்சை நோய் நாடல்.
டாக்டர் மு. துளசிமணி அரசு மருத்துவமனை, பாண்டிச்சேரி —	மருந்தியல்.
டாக்டர் சரசாபாரதி, சென்னை மருத்துவக்கல்லூரி. —	நோய்க் குறியியல்.

இலக்கியத் துறைப் பணி

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இலக்கியத்துறை, பத்துப்பாட்டு எட்டுத் தொகைகளை உள்ளடக்கிய சங்க இலக்கியங்களுக்குப் பொருட் களஞ்சியம் (COMPENDIUM) ஒன்றை உருவாக்கும். பண்டைத் தமிழர்களின் நாகரிகம் பண்பாடுகளை அறிய இக்களஞ்சியம் பெரிதும் உதவும். புலவர்கள், புரவலர்கள், வேந்தர்கள், குறுநில மன்னர்கள் முதலியவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் வரலாற்று நிகழ்ச்சிகள் எல்லாம் இடம் பெறும்,

பண்டைத் தமிழர் வாணிகம், அரசியல், தெய்வங்கள், மலைகள், ஆறுகள், ஊர்கள், மரம் செடி கொடிகள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன முதலிய உயிரினங்கள், உணவு, உடை, நீர், அணி வகைகள், திணைப் புனைவுகள், அகத்திணை, புறத்திணைகள் பற்றிய செய்திகள், மருத்துவம், சோதிடம், வானநூல், கட்டடக்கலை, இசைநாடகம் முதலிய பிற துறைச் செய்திகள் எல்லாம் தொகுக்கப் பெறும்.

மூலநூல்களிற் காணப்பெறாத புதிய செய்திகளை உரையாசிரியர்கள், திறனாய்வாளர்கள் முதலியோர் புலப்படுத்தியிருப்பின் அவற்றையும் தனியே வகுத்து வழங்கும்.

இவற்றிற்குப் பொருள் என்ன?

தமிழ்க் கல்வெட்டுகளில் பயின்றுவரும் சில சொற்கள் நாம் இயல்பாகக் காணும் பொருளில் அன்றி வேறு பொருள்களில் கையாளப்பட்டுள்ளன. கீழே சிலவற்றைத் தொகுத்து அளித்துள்ளோம். உங்களால் பொருள் கூற முடிகிறதா பாருங்கள்.

1. உடல்
2. ரண்டு
3. ஒடுக்குதல்
4. காதலர்
5. காதலர் காதலர்
6. சாணி
7. எழுத்து
8. முதுகண்
9. கிழவன்
10. பூ
11. குத்துக்கால்
12. பண்டாரம்
13. பிடிபாடு
14. மாமடி
15. பிரமாதம்
16. மண்டை

இயலவில்லையா? அடுத்த பக்கம் பாருங்கள்.

வெளிநாட்டுத் தமிழ்க் கல்வி

பிற பல்கலைக் கழகங்களுடன் — சிறப்பாகத் தமிழர் வாழும் கீழை நாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் — ஆராய்ச்சி உறவு வைத்துக் கொள்ளவும் அயலகத் தமிழர் உறவு பற்றிச் சிறப்பாக ஆய்வு நிகழ்த்தவும் தமிழர் பேரெண்ணிக்கையில் வாழும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் அமைந்துள்ள வாய்ப்புக்களை இயக்குநர் தி. முருகரத்னம் நேரில் கண்டறிந்து வந்துள்ளார். அந்நாடுகளின் பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், பேராசிரியர்கள், துணை வேந்தர்கள், உயர் கல்வி அதிகாரிகள், அமைச்சர்கள், தொழிலாளர் மன்றங்கள், கல்வியாளர் மன்றங்கள், கோவில்கள், நூலகங்கள், நூல் விற்பனை நிலையங்கள்—இங்கெல்லாம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நோக்கங்களும், திட்டங்களும் விளக்கி உரைக்கப்பட்டு ஆதரவு பெறப்பட்டது. தமிழ் ஆராய்ச்சிப் பொருள்கள், ஆராய்ச்சி வல்ல அறிஞர்கள், பொருள் உதவி வாய்ப்புகள், ஆராய்ச்சியாளர் பரிமாற்றம்—இவற்றுக்கான வாய்ப்புகள் இப்பயணத்தால் பெருகி உள்ளன. தமிழ்த் தொழிலாளர் சங்கங்களும் ஆராய்ச்சிக்கு உதவ முன் வந்துள்ளன. இதனால் தென் கிழக்கு ஆசியாவிற்கெனத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் புதிய பதவிகளும் திட்டங்களும் உருவாகவும் அறிஞர் பரிமாற்றம் ஏற்படவும் வாய்ப்புகள் தோன்றி உள்ளன. தமிழர் வாழும் அயல் நாடுகளில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றித் தெளிவும் புத்துணர்வும் ஆர்வமும் இப்பயணத்தால் தோன்றியுள்ளன.

நினைவூட்டுகிறோம்'

பல்கலைக் கழகச் செய்தி மலரின் ஆண்டு உறுப்பினர் கட்டணம் ரூ.5/- மூவாண்டுக் கட்டணம் ரூ.12/- உடனே உறுப்பினராக வேண்டுகிறோம். கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி ஆசிரியர், செய்திமலர் தமிழ்ப் பல்கலைக் கழகம். தஞ்சை-1''

''இருபதாம் நூற்றுண்டில் குறிப்பாக விடுதலை பெற்ற பின்னர்த் தாய்மொழிக் கல்வியில் நேர்ந்த ஒரு மாற்றம் அது எல்லா அறிவுத் துறைக்கும் பயனாக வேண்டும் என்பது. தமிழகத்தில் 1936 முதலும், இலங்கையில் பல ஆண்டுகளுக்கு முன்னரும் பொறியியல், மருத்துவம் முதலிய துறைகளுக்குத் தாய்மொழியைப் பயன்படுத்தும் முயற்சி அரும்பியதை நாமறிவோம். கணிசமான முன்னேற்றம் அப்போது ஏற்படாவிட்டாலும் பின்னடைந்த முயற்சிகளுக்கு இவை வழிகோலின. தாய்மொழிக் கல்வியால் இயந்திரப் புரட்சியும், பொருளாதாரவளமையும் பெற்றவைதான் இன்றுள்ள இங்கிலந்து, பிரான்சு, ஜெர்மனி முதலிய முன்னேறிய நாடுகள். ஜப்பானும், தென்கொரியாவும் இப்போது தாய்மொழிக் கல்வியால் செல்வச் செழிப்புப் பெற்றுள்ளன. தமிழகத்தில் கோவைப் பகுதியில் பல தொழிற்சாலைகள் தோன்றியதால், அங்குள்ள தொழிலாளர்கள் ஈடுபாட்டுடன் வேலை செய்வதற்குத் தமிழில் அறிவியல் நூல்கள் செய்யும் உந்தல் பெருமளவில் தோன்றியதை நாம் மறந்துவிட முடியாது. எனவே அறிவியல் வளர்ச்சியும், பொருளியல் வளர்ச்சியும் இணைந்து நடைபோடுவன. இதற்குத் தமிழ்மொழி தன்னைப் பண்படுத்திக் கொள்ளாவிட்டால் தமிழகத்தில் வறுமை நீங்காது. கலையும் மொழியும் வளரச்செல்வச் செழிப்புத் தேவை என்பதை நாம் நன்கறிகறிவோம். நமது பட்டப்பாடத் திட்டத்தில் அறிவியல் வளர்ச்சிக்குத் துணையாக வகுப்புகள் தொடங்குவது, பாடநூற்கள், சிறப்புப் பாடல்கள் இவற்றைப் பெருக்குவது இயலுமா என்று ஆராய வேண்டியது மிகவும் தேவை. ஆங்கிலத்தின் மூலம் அறிவுப் புரட்சி ஏறத்தாழ நூற்றுக்கு எட்டுப்பேரை மட்டும் வருவாய் நிலையில் உயர்த்தியுள்ளது. மீதமுள்ள 92 பேர் உழைத்து தன்காலில் நிற்கும் திறமையைப் பெறவில்லை என்பது நாடறிந்த செய்தி. எனவே குறைந்த வருவாயும், வறுமையும் நீங்க வேண்டுமாயின் அறிவியல் நூல்கள், அவற்றைப் பரப்பும் துணையாளர்களான ஆசிரியப் பெருமக்களின் துணை. அவற்றைப் பயன்படுத்தும் மாணவர்களின் ஒத்துழைப்பு இவை தேவை. படிப்பின் குறிக்கோள் அரசாங்க உத்தியோகம் அன்று படித்தவர்கள் அனைவருக்கும் எந்த அரசும் தக்க அளவில் அலுவல் தந்ததாகச் சமதர்ம அரசுகள் உட்படச் சான்றுகள் இல்லை, தன்காலில் நிற்கும் ஒரு சமுதாயத்தை உருவாக்க, கல்வியை மாற்றியமைக்க ஆசிரியர்களால்தான் இயலும். தமிழகத்தில் தமிழாசிரியர்களுக்குப் பெரும் பங்குண்டு; பெரும் பொறுப்புண்டு. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பணி இதுவாக இருக்கும்.''

''இந்தப் பல்கலைக் கழகம் எனக்குத் தெய்வீகமானது''

–துணைவேந்தர் வ. அய். சுப்பிரமணியம்,
தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்கள் கருத்தரங்கு.

இறைவனுக்கு எடுக்கப்பட்ட கோயில்களில் இறைவனோடு இலக்கணியையும் சேர்த்து வழிப்பட்ட பெருமை இந்தியாவில் தமிழகத்திற்கு மட்டுமே உண்டு. தமிழகத்தில் மட்டுந்தான் மற்றையத் தெய்வங்களுடன் இலக்கண ஆசிரியர் பதஞ்சலியின் உருவமும் பல கோயில்களில் காணப்படுகிறது,

செய்தி மலர்

பதிவெண் 15033/8x21
திங்களிதழ்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

படித்தோர் பகர்வன:

ஞாயிறு திரும்பி (சித்தர் வைத்ய அகராதி) பொழுதுவணங்கி(வின்ஸ்லோ அகராதி) என்றெல்லாம் கூறியது சூரிய காந்தியை (Sun Flower) அல்ல: அது சூரியனை நோக்கித் திரும்புவதுமில்லை. ஆனால் நெருஞ்சிச் (முள்) செடியின் மலர்தான் சூரியனை நோக்கியே திரும்பும் மலர். அதை நான் பல காலும் சோதித்தறிந்தேன்.

Expression என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'வெளிப்பாடு' சரியான தமிழ்ச் சொல் ஆகலாம் இல்லையா?

—கம்பன் அடிப்பொடி, கம்பன் மணி மண்டபம், காரைக்குடி.

தமிழ்ப் பல்கலைக் கழகம் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென வேண்டுகிறேன்:

1. வெளிநாட்டு மாணவர் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் தமிழை எளிமைப் படுத்துதல்.
2. மொழிச் சீர்திருத்தம்.
3. உலகளாவப் பரவி வாழும், பாண்டிச் சேரிப் பிரஞ்சுத் தமிழருக்கும் பிரஞ்சு வெள்ளைக்காரருக்கும் உதவியாகப் பிரஞ்சுவழித் தமிழ் கற்பிக்கப் பாடநூல் எழுதுதல்.
4. இந்தியா என்றால் சமசுகிருதம் என்று ஐரோப்பியர் அறிந்து வரும் மாயையை மாற்றி, தமிழையும் அதன் தொன்மையையும் வெளிநாட்டு மொழிகள்வழி அறிய உதவும் எழுத்து வெளியீடுகள்.
5. தமிழ்ப் பண்பாட்டு வெளியீடுகள்.
6. தமிழ் — பிரஞ்சு — தமிழ் — அகராதிகள்

— தாயம்மாள் அறவாணன், டாக்கர், செனகல்.

புதிய கலைச் சொற்கள் கிட்டும் வரை பிற மொழிச் சொற்களைத் தவிர்க்க முடியாத, இன்றியமையாத இடத்து அப்படியே கொள்ளலாம்.ஆனால அந்நிலையிலும் தமிழல்லாத பிற எழுத்துகள் இடம் பெறலாகாது என்பது நம் தமிழ்ப் பல்கலைக் கழகத் தலையாய நோக்கமாக இருக்கட்டும்.

Expression என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேர் தமிழ்ச் சொல் கேட்டிருந்தீர்கள்;

எங்களறிவுக்கு எட்டிய வகையில் "வெளிப்பாடு" என்பது அதன் நேர்ப் பொருள் என எண்ணுகிறோம்.

—ஆசிரியர்கள், அரசு மேல் நிலைப் பள்ளி, நல்லமமாள்புரம், தென்கலம்

(பலரும் இதற்கு 'வெளிப்பாடு' என்ற சொல்லையே தந்துள்ளனர். —ஆசிரியர்)

3ஆம் பக்கத்திலுள்ள சொற்களுக்குப் பொருள்

1.	முதற் பொருள்	9.	உரியவன்
2.	தீங்கு	10.	விளைவி
3.	சேர்த்தல்	11.	தடை ஏற்படுதல்
4.	மகன்	12.	கருவூலம்
5.	பேரன்	13.	ஒப்பந்தம்
6.	மனைவி	14.	மாமன்
7.	கையொப்பம்	15.	இறைத்தல்
8.	பாதுகாவலர்	16.	வாயகன்ற பாத்திரம்

கருவிகள் தருக

பல்வேறு இசைக் கருவிகள் அடங்கிய 'இசைத்துறை அருங்காட்சியகம்' ஒன்றை, அமைக்கப் பல்கலைக் கழக இசைத்துறை ஏற்பாடு செய்து வருகிறது. பழமையான அரிய, புதிய இசைக் கருவிகள் வைத்திருப்போர் தகவல் தருக. தக்க கருவிகட்கு ஏற்ற தொகை அளிக்க 'இசை'கின்றோம்.

நடந்தவை

12.6.82: தொகுப்பியல்துறை ஆய்வுக்குழுக்கூட்டம் நடைபெற்றது.

14.6.82: திறந்த வெளிச் சிறை இருந்து வந்த 114.18 ஏக்கர் நிலம் பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

14, 15 & 16. 6. 82 ஓலைச் சுவடித் தொகுப்பு பற்றி திரு. எஸ். எம். கத்ரே அவர்கள் உரையாற்றினார்.

21. 6. 82 இலக்கியத்துறையில் திரு. வெள்ளை வாரணனார் அவர்களும், சுவடிப்புலத்தில் திரு. மு. சண்முகம் பிள்ளை அவர்களும் பேராசிரியர்களாகப் பணியேற்றனர்.

23.6.82: விரிதமிழ் இயக்குநர் திரு. முருகரதனம் தம்முடைய இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், சுற்றுப் பயணத்தை முடித்துத் திரும்பினார்.

26.6.82 தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநர் திரு.வையாபுரி அவர்கள் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்து துணை வேந்தரவர்களுடன் பற்றி பல்கலைக் கழகக் கட்டிடங்கள் அமைப்பது உரையாடினார்.

29.6.82: இலக்கியத் துறை ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

30.6.82 & 1.7.82; விரிதமிழ்த் துறையைச் சார்ந்த ஊர் நிலை ஆய்வின் தொடக்கமாகத் தஞ்சாவூர், கோயம்புத்தூர் மாவட்டங்கள் பற்றிய ஆய்வு குறித்துக் கலந்துரையாடல் நடைபெற்றது. தஞ்சாவூர், கோயம்புத்தூரைச் சேர்ந்த கல்லூரி ஆசிரியர்கள் சிலர் கலந்து கொண்டார்கள். மதிப்பிற்குரிய துணை வேந்தரவர்கள் கள ஆய்வை மேற்கொள்ளும் நெறி முறையினை விளக்கி தஞ்சைக்கு அருகிலுள்ள வல்லத்தில் கள ஆய்வினையும் தொடங்கி வைத்தார்கள். இக் கள ஆய்வுப் பணி விரைவில் இவ்விரு மாவட்டங்களின் அனைத்து ஊர்களிலும் மேற்கொள்ளப்படும்.

பதிப்பாசிரியர்: சு. செல்லப்பன், பதிப்புத்துறை இயக்குநர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.